Employment Plus

Parent Pathways
An Australian Government Initiative

# முக்கிய சேவை உறுதிமொழிகள்

## எங்களைப் பற்றி

Employment Plus என்பது The Salvation Army - இன் ஒரு அங்கம் ஆகும். இது 1880 ஆம் ஆண்டு முதல் ஆஸ்திரேலியர்களுக்குப் பல்வேறு சேவைகள் மூலம் ஆதரவளித்து வரும் ஓர் சர்வதேச கிறிஸ்தவ இயக்கமாகும்.

## சேவைகள்

பெற்றோர்களின் பலம், லட்சியங்கள் மற்றும் சவால்களைப் புரிந்துகொண்டு, அடையாளம் காணப்பட்ட இலக்குகளை நோக்கி ஒவ்வொரு அடியையும் திட்டமிட்டு, அதனைத் தொடர்ந்து கண்காணித்து, இறுதியில் அந்த இலக்குகளை அடைய, எங்களுடனான பயணம் முழுவதும் ஒரு பிரத்யேக வழிகாட்டி பெற்றோர்களுக்கு ஆதரவாக இருப்பார். எங்கள் வழிகாட்டிகள் நேரடியாகச் சந்தித்தல் மற்றும் ஆன்லைன், தொலைபேசி வாயிலாக உங்களுக்கு ஆதரவளிக்க எப்போதும் தயாராக இருக்கிறார்கள். நீங்கள் புதிய விஷயங்களைக் கற்றுக்கொள்ள, சக பெற்றோர்களுடன் ஒரு தொடர்பு அமைப்பை உருவாக்கிக் கொள்ள, மேலும் உள்ளூர் சேவைகளை எளிதாக அணுக குழு செயல்பாடுகளை வழங்குகிறோம். ஒவ்வொரு பெற்றோரின் முன்னேற்றத்தையும் சேவைகளில் அவர்களின் திருப்தியையும் ஆய்வு செய்து மதிப்பாய்வு செய்து, தேவையான மாற்றங்களுக்காகப் பரிந்துரைக்கிறோம்.

## முடிவுகள்

ஒவ்வொரு பெற்றோரின் தனிப்பட்ட தேவைகள் மற்றும் லட்சியங்களுக்கு ஏற்ப எங்கள் சேவையை மாற்றி அமைத்துக்கொள்கிறோம். அத்துடன், ஆலோசனை வழங்குதல், உள்ளூர் சேவைகளுடன் இணைத்தல் மற்றும் நிதி உதவிகள் மூலம் பெற்றோர்கள் தங்கள் இலக்குகளை அடைய உதவுகிறோம், இந்த உதவிகளில் பின்வருபவையும் அடங்கும்:

- பயிற்சி உபகரணங்கள், பெற்றோர் ஆதரவுகள், மற்றும் போக்குவரத்து போன்ற அன்றாடத் தேவைகளுக்கான உதவிகளை நாங்கள் வழங்குகிறோம்.
- தரமான உள்ளூர் சேவைகளுக்கான அணுகலை எளிதாக்குகிறோம்.
- கல்வி மற்றும் தகுதி இலக்குகளை அடைய பெற்றோர்களுக்கு உதவுகிறோம்.
- தன்னார்வத் தொண்டு, ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்பு மற்றும் தொழிலில் முன்னேற்றத்திற்கு உதவுகிறோம்.
- வெற்றிகளைக் கொண்டாடி, அடுத்த கட்ட இலக்குகளை அடைய உற்சாகம் அளித்து நம்பிக்கையையும் ஊக்கத்தையும் அதிகரிக்கிறோம்.
- Parent Pathways வழியாக, உள்ளூர் வேலை வழங்குநர்கள் தங்கள் பணியாளர் தேவைகளைத் திறம்படப் பூர்த்தி செய்ய உதவுகிறோம்

## ஈடுபாடு / தொடர்புகள்

Western Melbourne - இல் உள்ள பல்வேறு குழுக்களுக்கான எங்கள் ஆதரவைப் பலப்படுத்த, நாங்கள் பல உள்ளூர் சேவைகள், பயிற்சி வாய்ப்புகள், மற்றும் கலாச்சார அமைப்புகளுடன் கூட்டு சேர்ந்துள்ளதோடு, சேவைகளுக்கிடையே அறிவைப் பகிர்ந்துகொண்டு, அனைவருக்கும் சிறந்த ஆதரவை வழங்குகிறோம். நாங்கள் உள்ளூர் சமூகங்களிலிருந்து வழிகாட்டிகளை நியமிக்கிறோம், மேலும் அவர்களின் திறன்களை மேம்படுத்த தொடர்ச்சியான பயிற்சிகளை வழங்கிவருகிறோம்.

## சேவை அணுகல் மற்றும் வளங்கள்

நாங்கள் பல இடங்களில் செயல்படுகிறோம். வழிகாட்டிகள் பெற்றோர்களை, அவர்கள் ஒப்புக்கொண்டபடி, வேலை செய்யும் இடங்கள் அல்லது சேவை மையங்கள் போன்ற வசதியான இடங்களிலும் சந்திப்பார்கள். எங்கள் தளங்கள் சாதாரணமாகவும், குழந்தைகளைக் கவரும் வகையிலும் உள்ளன, மேலும் குழந்தைகளுக்கான பொம்மைகளும், செயல்பாடுகளும் இதில் அடங்கும்.

## மனிதவள வியூகம்

எங்கள் குழுவில் வழிகாட்டிகள், ஒரு தள மேலாளர், மற்றும் ஒரு ஈடுபாட்டு ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் உள்ளனர். இவர்கள் ஒவ்வொருவரும் கலாச்சாரம், வேலைவாய்ப்பு மற்றும் தகுதிகள் ஆகியவற்றில் மாறுபட்ட பின்னணிகளைக் கொண்டவர்கள். எங்கள் வழிகாட்டிகளும் மூத்த வழிகாட்டிகளும் ஒரே நேரத்தில் 50 பெற்றோர்கள் வரை ஆதரவளிக்கும் திறன் கொண்டவர்கள். தள மேலாளர் உள்ளூர் செயல்பாடுகளைப் பார்வையிடுகிறார். அதே சமயம், ஈடுபாட்டு ஒருங்கிணைப்பாளர், பெற்றோர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் உள்ளூர் சேவைப் பங்காளர்களின் வலையமைப்பு சிறப்பாகச் செயல்படுவதை உறுதி செய்கிறார். எங்கள் அனைத்து ஊழியர்களுக்கும் தொடர்ச்சியான தொழில்முறை கற்றல் மற்றும் மேம்பாட்டுக்கான ஆதரவு வழங்கப்படுகிறது.

**உதவி தேவையா? உங்களுக்கு உதவத் தயாராக உள்ளோம்**

☎ 136 123

www.employmentplus.com.au

Employment Plus

Parent Pathways
An Australian Government Initiative

# WESTERN MELBOURNE REGION SITE LOCATIONS

| Service Area | Site Address | Type | Opening Hours |
|---|---|---|---|
| Manor Lakes | 86 Manor Lakes Boulevard,<br>Manor Lakes, VIC, 3024 | Outreach | By appointment |
| Werribee | 5 Pine Avenue,<br>Werribee, VIC, 3030 | Full-Time | Monday-Friday,<br>9am - 5pm |
| Hoppers Crossing | 80 Lonsdale Circuit,<br>Hoppers Crossing, VIC, 3029 | Full-Time | Monday - Friday,<br>9am - 5pm |
| Altona Meadows | 2 Newham Way,<br>Altona Meadows, VIC, 3028 | Outreach | By appointment |
| Altona North | 7 Plover Drive,<br>Altona North, VIC, 3025 | Outreach | By appointment |

**உதவி தேவையா? உங்களுக்கு உதவத் தயாராக உள்ளோம்**

☏ 136 123

www.employmentplus.com.au